# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :25 January 2025*

கோட்டை:7 வாயில்:25 ஜனவரி 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*


# EDITORIAL BOARD


Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD


**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**அகப்பொருள் மரபுகளின் பொருண்மைகள்**
**தெ.மதுபாலா**

**தற்காலப் பயன்பாட்டில் தன்மை வினைமுற்றுச் சொற்கள்**
**கோ. கோகிலா**

**தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்கள் சிறந்த ஆசிரியர்கள்**
**முனைவர்.வி.சேகர்**

**ஐங்குறுநூற்றில் மருத நில வாழ்வியல் கோட்பாடு**
**கோ. கோகிலா**

**ஐங்குறுநூற்று மருதத்திணையில் "வேட்கைப் பத்து" வெளிப்படுத்தும் செய்திகள்**
**த.கல்பனா**

**சங்க இலக்கிய அகப்பாடல்களில் தோழியின் உளவியல் கூறுகள்**
**கு.கலையரசி**

**ஆற்றுப்படை இலக்கியத்தில் ஐந்திணைசார் உணவுகள்**
**மு.கௌசல்யா**

**சங்க இலக்கியங்களில் சமூக உறவுகள்**
**முனைவர் வெ. நளினி**

**பறம்பு மக்களின் பரந்த வாழ்வியல்**
**வீ. மஞ்சு**

**குறுநில மன்னா ்களின் பொருளாதாரநிலை**
**மு. சதீஸ்குமார்**

**கம்பராமாயணம் காட்டும் வாலிவதைப்படலம்**
**மு.கனகவள்ளி**

**காப்பியங்களில் மரபுக்கருவிகள்**
**வீ.விஜயலட்சுமி**


**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# அகத்தினுள்


இஸ்லாமிய சூஃபித்துவமும் சடங்கு முறைகளும்
முனைவர் சா.இன்குலாப்

தேவிபாரதியின் "உயிர்தெழுதலின் சாபம்" சிறுகதையில் பெண்மன நிலைபாடு
S.Priyadharshini

விமணியின் குழந்தைச் செல்வம் படைப்பு - ஒரு பார்வை
முனைவர் கு.புஷ்பாவதி

அண்ணாவின் நாடகப் பனுவல்கள் மற்றும் நிகழ்த்துகைகளில் அவரது மறுமலர்ச்சி விடுதலை அரசியல் அரங்கு ஓர் ஆய்வு.
திரு.கு.ரவிச்சந்திரன்

பாரதிதாசனின் பெண்ணுலகம்
கா. கவிதா

பாரதியார் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்
நா.ரஹமத் நிஷா

“தோட்டியின் மகன்” நாவல் காட்டும் துப்புரவு தொழிலாளர்களின் வாழ்வியல் நிலை
மு. வசந்தி

நூற்றாண்டு கண்ட எழுத்தாளுமை இராஜம் கிருஷ்ணன்-பெண்ணின் குரலாய்
முனைவர் ப.விமலா அண்ணாதுரை

கே.ஆர்.மீராவின் புதினங்களில் வெளிப்படும் பெண்மொழி
நா.செளந்தர்யா

Creating Virtual Platforms to Showcase Undergraduates' Artworks
1.Yasanthini, G.F



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் அரசன்**
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

**Lakśana and Lakśya in Music**
Srivaramangai Sadagopan

**சதாசிவ ப்ரம்மேந்திரரின் இசை உருப்படிகளில் பகவத்கீதையின் ஸாராம்ஸம்**
ச. காயத்ரி தேவி

**Importance of Sāhityam and the Influence of the Great composers in the musical compositions**
Ms. Janaki Sadagopan

**தெலுங்கும் தமிழும் தித்திக்கும் கலைவடிவம் பாகவதமேளா ஓர் ஆய்வுநோக்கு**
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்

**தமிழ்நாட்டின் மரபுவழி நிகழ்த்துகலையான தெருக்கூத்து**
கலாநிதி. ஷார்மிலளா றஞ்சித்குமார்

**திருமந்திரத்தில் காணப்படும் உடல்சார் கருத்துகள் நவீன அறிவியல் பார்வை**
பேராசிரியர் முனைவர் சு.ஹரிபிரசாத்



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# பறம்பு மக்களின் பரந்த வாழ்வியல்
## *(Detailed Description Of Livelihood Of Parambu People)*

**ஆய்வாளர்**
**வீ. மஞ்சு ( Reg.no. BDU2310632780329)**
**முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்**
**தமிழ்த்துறை,**
**அரசினர் மகளிர் கல்லூரி(தன்)**
**கும்பகோணம் 612 001.**

**நெறியாளர்**
**முனைவர் கோ. ஜெயஸ்ரீ**
**இணைப்பேராசிரியர்**
**தமிழ்த்துறை,**
**அரசினர் மகளிர் கல்லூரி (தன்)**
**கும்பகோணம் 612 001.**

**ஆய்வுச் சுருக்கம்:**

வள்ளல்கள் எழுவருள் ஒருவனான பாரி என்னும் வேளீர் குல நல்லோனை தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்டதே **வீரயுக நாயகன் வேள்பாரி நாவல்** ஆகும். இதன் ஆசிரியர் **சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் சு.வெங்கடேசன்** ஆவார். இவ்வாய்வானது இயற்கைஅறநெறிக்கு கட்டுப்பட்டு அதனின்றும் வழுவாமல் ஓர் இனக்குழுத்தலைவனாகவும் தன்னடைக்கலம் வந்த பிற குலங்களைக் காக்கும் பாதுகாவலனாகவும் வேளீர் குலத்தின் தலைவனாகவும் விளங்கும் பாரியின் பறம்பு நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகள் மற்றும் அவர்களின் பண்பு நலன்களை ஆராய்வதாக அமைகிறது. அம்மக்களின் முடியாட்சி அற்ற வாழ்க்கை முறை எத்தகைய நிலையில் அமைந்திருக்கிறது என்பதனை புலவர் கபிலர் அவர்களின் கண்ணோட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. மேலும் பறம்பு மக்களின் வாழ்க்கை முறையானது தற்காலத்தில் திண்டுக்கல் மாவட்டதில் உள்ள பழநி, சிறுமலை போன்ற பகுதிகளில் வசிக்கும் பளியர் என்ற பழங்குடி மக்களின் வாழ்வியல் முறையோடு ஒத்துப்போவதாக உள்ளது. அவர்களின் வாழ்வியலும் இயற்கையோடு இணைந்ததாக உள்ளது. இயற்கையையோடு ஒன்றி அதன் போக்கிலேயே வாழ்கின்றனர். அவர்களின் வாழ்வாதாரம் தற்போதும் கீழ்நிலையிலேயே உள்ளது. மேலும் அரசாங்கம் விதித்த தடை சட்டத்தினால் பாதிக்கப்பட்ட நிலையையும் ஆராய்ந்து தொகுப்புரையில் விளக்கப்படுகிறது.

**திறவுச்சொற்கள்:**

வேளிர், பறம்பு மலை, பளியர், சிறுமலை, விருந்தோம்பல், வாழ்வியல் முறை.

***synopsis:***

***Velpaari is the novel is about Paari a good characterized and man of bravery who is one among the seven Philanthropist. This novel is written by S. Venkatesan who is awarded by Sahithya Academy. This research further elaborates livelihood and characteristics of people of Velir community which headed by Paari and his nature of moral following path without deviation and being the savior of his own people and the refugees who believes in Paari. The people over there was not under the monarch system of ruling which is explained by poet kabilar. The place of Parambu people is now palani whicj is situated at Dindugal district. Paliyar a group of people who lives in sirumalai regions has similar livelihood of Parambu people as their livelihood also get through the life of nature. They live along with the nature and their economic***

*value still lies behind also the synopsis explains the status of people affected by government' s restrictions act.*

*Keywords:*

*Velir, Parambu hill. Paliyar. Sirumalai, Hospitality, Lifestyle.*

**வாழ்வியல்-விளக்கம்:**

வாழ்வியல் என்பது ஒரு குறிப்பிட்ட இன மக்களின் அன்றாட பழக்க வழக்கங்கள் நடைமுறைகள்,செயல்பாடுகள், பண்பாடு, விழாக்கள் அவர்களின் தொழில் பண்புகள், பொருளாதார நிலை ஆகியவற்றை ஆராய்வதைக் குறிக்கும்.

**வேள்பாரி:**

கடையெழுவள்ளல்களுள் ஒருவன் பாரி ஆவான். இவனது ஆட்சிப்பகுதி பறம்பு எனும் மலை நாடு ஆகும். . மூவேந்தர்களையும் போரில் தோற்கடித்த வீரத்தை உடையவன்.

**"யாண்டு பல கழிய வேண்டுவயிற் பிழையாது**
**ஆள் இடூஉக் கடந்து வாள் அமர் உழக்கி**
**ஏந்துகோட்டு யானை வேந்தர் ஓட்டிய**
**கடும் பரிப் புரவிக் கைவண் பாரி." (அகம்78:19-22)**

இதனை அகப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. வேளீர் குலத்தின் நாற்பத்திரண்டாவது தலைவன்தான் வேள்பாரி ஆவான்.[1] வேடர் குலமும், கொடிகுலமும் இணைந்து உருவானதுதான் வேளீர் குலம். வேளீர் குலத்தின் முதல் தலைவன் மாவீரன் எவ்வி ஆவான். அவனின் பெயராலேயே எவ்வியூர் என்றழைக்கப்படுகிறது.[2]

பறம்பு நாடு பல்வேறு தனிக் குலங்களை கொண்டு இருந்தது இருப்பினும் வேளீர் குலத்தலைவனான வேள்பாரியைத் தலைவனாக கொண்டு மக்கள் சிறப்புடன் வாழ்ந்துள்ளனர்.

**பறம்பு மக்களின் வாழ்க்கைமுறை:**

பறம்பு நாட்டில் மனிதன் உழைத்து விளைவிக்க கூடிய எந்தவொரு பொருளும் இல்லை. தினை வகைகள் , பழ வகைகள் , காய்கறி வகைகள் எல்லாம் இயற்கையில் தாமாக விளைகின்றன. **" உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே"** இதனைக் கபிலர் அவர்கள் புறப்பாடலில் குறிப்பிட்டுள்ளார்.[3] உணவு என்பது சேகரிப்புதானே தவிர உற்பத்தி அல்ல என்ற கொள்கையை கடைப்பிடிக்கிறார்கள்.

**வீரம் சார் வாழ்வு:**

ஆண்களின் வாழ்வு முழுவதும் ஆயுதங்களோடு கழிகிறது. வேட்டை தொடங்கி போர் வரை எல்லாவிதமான ஆயுதங்களையும் பயன்படுத்தும் கலையை ஒவ்வொருவரும் கற்றிருக்கின்றனர். எட்டு வயதில் காடு அறிந்துவர வீட்டை விட்டு வனத்துக்குள் அனுப்பப்படும் சிறுவர் அதன்பிறகு மாவீரராகத்தான் குடில் திரும்புகின்றனர். அப்பயணத்தில் அவர்கள் இயற்கையை அறிதல், தாவரங்கள், விலங்குகள், பறவைகள், காலநிலைகள் ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொண்டு பேரறிவினை பெற்றவர்களாக திகழ்கின்றனர்.

- **மருத்துவ அறிவு:**

மருத்துவத்தில் இவர்கள் தேர்ந்தவர்களாகவும் உள்ளனர். பயிற்சியின்போது வாள்முனை நெஞ்சைக் கீறிப்போனாலும் கவலை கொள்ளும் வீரன் எவனும் இல்லை.

'**அத்தாப்பொறுத்தி**' மூலிகையைக் கண்டறிந்த பிறகு சதையை அறுத்துக்கொண்டு போனாலும் அறுத்ததைப் பொறுத்திக் கொடுக்கிறான் மருத்துவன்.[4] தற்போதும் எலும்பொட்டி, சதையொட்டி போன்ற மூலிகைகள் பயன்பாட்டில் உள்ளன. அவை உடைந்த எலும்புகளை பொறுத்துவதற்கும், கிழிந்த சதைகளை ஒட்டவும் பயன்படுகின்றன.

**மாண்டாரை யுய்விக்கு மருந்தொன்று**
**மெய்வேறு வகிர்களாகக்**
**கீண்டாலும் பொருந்து விப்பதொரு மருந்தும்**
**..................................................................(இராம. யுத்த. 2664:1-4)**

இராமாயணத்திலும் போரில் காயம்பட்ட உடல் உறுப்புகளை ஒட்ட '**சந்தான கரணி**' என்ற மூலிகை பயன்படுத்தியுள்ள குறிப்புகள் உள்ளன.

உடல் வலிகளை மறுத்துப் போகச் செய்யவும் நினைவுகளை மறக்கவும் செய்ய '**தனைமயக்கி**' என்னும் மூலிகையை நீலன் என்னும் பறம்பு வீரன் கபிலருக்கு பயன்படுத்துகிறான்.

- **விஷமுறி மருந்து:**

வேளீர் மக்கள் அனைவரும் இடுப்பில் பனம்பூவின் குருத்து ஒன்றை எப்போதும் செருகி வைத்திருப்பார்கள். குட்டையில் தேங்கி கிடக்கும் நீரில் விஷம் ஏறியிருக்கும் அதில் பனம்குருத்தினை சிறிது நேரம் போட்ட பிறகு அந்நீரினை குடிக்கலாம் எவ்வித விஷமும் தாக்காது.[5] தாவரம், சூழல்-தனிமனித வாழ்வு பொருந்தி வாழப்படுகின்றது; மாற்றம் வலிந்து செய்யப்படுவதில்லை.

**விருந்தோம்பல்:**

புதிதாக எவராவது வந்தால் அவர்களுக்கு கூடை நிறைய காட்டில் பல்வேறு நாவல் மரங்களில் இருந்து பறித்த நாவல் பழங்கள் தரப்படுகிறது. அதில் அவர் முதலில் எந்த நாவல் பழத்தை எடுக்கிறார் என்பதிலிருந்து அவரின் காடுபற்றிய அறிவை விருந்தோம்பலுடன் அளக்கின்றனர்.[6] ஒவ்வொரு நாவல் பழத்திற்கும் ஒவ்வொரு விதமான சுவையை உடையதாக உள்ளது. கனிகளின் சுவையை நாம் எந்த வழியில் எந்த சேர்மானத்தோடு அழைத்து செல்கிறோம் என்பதுதான் முக்கியம் என கொள்கின்றனர்.[7]

கபிலர் பூநாவல் பழத்தை எடுத்து முதலில் உண்டார். இதிலிருந்து அவர் காட்டிற்கு புதியவர் என்பதை அறிந்தனர். இரவில் அவருக்கு '**தும்முச்சிசாறு**' கொடுக்கப்பட்டது. இதை ஏன் எனக்கு கொடுக்கிறீர்கள் என்று கபிலர் கேட்டார். அதற்கு நீலன் நீங்கள் காட்டுக்குப் புதியவர் அல்லவா அதனால்தான் கொடுக்கிறோம் என்றான் அதற்கு கபிலர் குறிஞ்சிலேயே என் வாழ்வின் பெரும்பகுதியை கழித்திருக்கிறேன் நான் காட்டிற்குப் புதியவனா? என்றார். அதற்கு நீலன் கூறியதாவது, மனித வழித் தடங்களின் வழியாக நீங்கள் காட்டை அறிந்திருப்பீர்கள். இது மனித வாசனை படாத காடு ஒளி விழாத இடத்துக்குள் நுழைந்து செல்ல வேண்டும். பல வகையான பூச்சிகள் இருக்கின்றன. சில பூச்சிகள் எல்லாம் கடித்த பிறகுதான் உங்களால் உணரமுடியும். அதன் பின்னரும் உணர முடியாத பூச்சிகள்தான் இந்தக் காட்டில் அதிகம். எனவே இம்மூலிகைச் சாறினை குடித்தால் மட்டுமே நல்ல உடல் நிலையோடு மலைமேல் ஏறமுடியும் என்றான். இக்காரணங்களால்தான் பாரியை மூவேந்தர்களும் நெருங்க முடியாது என்று பாணர்கள் பாடுவதின் அர்த்தம் கபிலருக்கு புரிந்தது.[8]

அணில்வால் தினை கொண்டு காய்ச்சப்பட்ட கஞ்சியும் மகர வாழை இலையில் சுருட்டப்பட்ட துவையலும் கபிலருக்கு உணவாக கொடுக்கப்பட்டது. புளிப்பிரண்டையை வால் மிளகோடு செய்யப்பட்ட துவையல். துவையல் காரம் மிகுந்தது துவையலின் காரத்திற்கு காரணம் சுருட்டப்பட்ட மகர வாழையின் கொழுந்துதான் ஆகும். முதல்நாள் இரவே அதில் சுருட்டி கட்டி வைத்து விடுகிறார்கள் நாள் செல்ல செல்ல துவையலில் காரம் கட்டி நிற்கிறது.[9]

பறம்பு மக்கள் காடுகளில், மலைகளில் கிடைக்கும் பொருட்களையே பயன்படுத்தி கொள்கின்றனர். வெளியே இருந்து அவர்கள் வாங்கும் ஒரே பொருள் உப்பு மட்டுமே ஆகும்.[10]

**பகிர்ந்துண்ணல்:**

கொற்றவை கூத்தினைப் பார்க்க பிற ஊர்களில் இருந்து மக்கள் பறம்பு நாட்டில் இருக்கும் ஆதிமலையை நோக்கி பயணம் செய்கின்றனர். பயண களைப்பில் குகையில் ஓய்வெடுக்கின்றனர். பசியார தங்களுடன் அவித்த பன்றிக்கறியை உப்பு போட்டு கொண்டு வந்து பகிர்ந்து உண்கின்றனர். மூன்று மலைகளை ஏறி இறங்கியவர்களின் பசியை அதுதான் போக்கும்.[11]

**” பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.“ (குறள்.322)**

என்ற பகிந்துண்ணும் அறப்பண்பினை போற்றி இருந்துள்ளனர்

இன்னென்ன மது வகைகளுக்கு இன்னென்ன கறிவகைகள்தான் பொருந்தும் என்று சுவையை வகுத்து உண்பவர்களாக பறம்பு மக்கள் இருந்தனர். ஈச்ச மதுவுக்கு வறுத்த கறி சரியான ஈடு.[12] மான்கறிக்கு ஈச்சங்கள் எடுபடாது, பறவைகளின் கறிக்கு தென்னங்கள் பொருந்தாது ஈனா கெடாரிக்கு மூன்றாம் நாள் பனங்கள்தான் சிறந்தது. அத்தி மதுவுக்கும் அறுபதாங்கோழியின் கறிக்கும் ஈடு.[13]

**விதிகள் அற்ற ஆட்சி:**

பாரி வேளீர் குலத்திற்கு தலைவன் ஆவான். அவன் இருக்கும் மலை ஆதிமலை. தலைநகரை தோற்றுவித்தவன் எவ்வி ஆவான்.[14] கபிலர் பாரியை அரசன் என்று நினைத்தார். அதற்கு பறம்பு வீரன் நாட்டை ஆள்வதைப்போல காடும் ஆளப்படுகிறது என நினைக்கிறீர்கள். காட்டை யாராலும் ஆளமுடியாது சின்னஞ்சிறு மனிதனால் என்ன செய்ய முடியும்? பகை, துரோகம், வீரம், சாவு அவ்வளவுதான் ஆனால் காட்டில் உள்ள எண்ணிலடங்கா உயிர்கள் அவ்வளவு ஆற்றல் கொண்டது. துளிர்விடும் ஒற்றை இலை வாழ்வை முடிக்க காரணமாக அமையும் என்பதை கூறுகிறான்.[15] இயற்கை பற்றிய ஆழ்ந்த புரிதல் உடையவர்களாக மக்கள் இருப்பதை அறியலாம்.

கபிலரால் மலைபாதையில் நடக்க இயலாமல் வந்து கொண்டிருப்பதனைக் கண்ட வீரன் நீலன் சொல்கிறான், எங்களின் பாதங்கள் மண்ணைப் பிடித்து நடந்து பழகியவை. சமவெளியில் வாழும் உங்களின் பாதங்கள் மண்ணில் தேய்ந்து நடந்து பழகியவை. பாதடியைக் கழட்டிவிட்டு பாதத்தை முன்னெடுத்து வையுங்கள். பற்களைப்போல விரல்களுக்கும் கவ்விப் பிடிக்கத் தெரியும் என்கிறான்.[16] காலணி இல்லா காலே இயற்கை என உணர்த்துகிறான். இன்று செயற்கையாக குத்தும் வகையில் (Acupressure Slippers)அமைக்கப்படுகின்றன.

**வீடுகள் அமைப்பு:**

ஆதிமலையின் நடுவில் உள்ள கரும்பாறையைச் சுற்றி பாறையோடு பாறையாகச் சற்றே குடைந்து முன்னால் புற்று மண்ணால் சுவர் எடுத்து மரச்சட்டகங்களால் வடிவமைக்கப்பட்ட

வீடுகளை கொண்டதாக இருந்தது. புற்றுமண் நெருப்பை ஒட்டவிடாது விலக்கிக் கொடுக்கும். நீரும் நெருப்பும் ஒன்றும் செய்துவிட முடியாத ஒரு கட்டுமானம்.[17] இக்கட்டுமானம் வியப்பிற்குரியது ஆகும். தற்போது உள்ள கட்டுமானங்களில் குளிர், வெப்பம் இரண்டுக்கும் ஏற்ற அமைப்பாக கட்டுவதில்லை. குளிர்காலங்களில் குளிருக்கு இதமாக வெப்பமூட்டும் சாதனங்களையும் வெப்ப காலங்களில் குளிரூட்டும் சாதனங்களையும் பயன்படுத்துகிறோம். எந்த வித தொழில்நுட்ப வளர்ச்சியும் கண்டுபிடிக்காத காலத்து மலைமக்களின் இவ்வறிவு போற்றத்தக்கது ஆகும்.

**குடிகளைப் போற்றும் திறன்:**

வேளீர் குல வீரன் ஒருவன் எறியும் ஈட்டியைக் கண்டு பெரும் வேந்தனே ஆனாலும் விலகி நிற்கும் மனநிலையை உருவாக்கிய மாவீரன் வேள்பாரி ஆவான். நாடு என்பது அரசும் அரச நியதியும்தான் என விதி செய்பவர்களுக்கு மத்தியில் நாடு என்பது அரசற்ற மக்களின் ஆதிநிலம் என நிலைநிறுத்தி உள்ளான்.[18] பாரி பெரும் வேந்தனாக இல்லாதிருப்பினும் வேந்தர்குரிய பண்புகளான யாவரிடத்தும் அன்பாக இருத்தல், குடிமக்களை பாதுகாத்தல் ஆகிய பண்புகளையுடையவனாக குடிமக்களால் போற்றப்படுகிறான். இப்பண்பினை வள்ளுவர்

**” கொடையளி செங்கோள் குடியோம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க் கொளி”** **(குறள்:390)**

எனும் குறள் வழி உரைத்தாரோ!

கபிலருக்கு விருந்தளிக்க விரும்பிய பாரி அறுபதாங்கோழியை வீரர்களைப் பிடித்து வர கூறுகிறான். வீரர்கள் மட்டுமல்லாது காடுகளில் மக்களும் குழுக்களாக இறங்கி தேட ஆரம்பித்தனர். தன் தலைவன் ஆசைப்படுகிறான் என்ற ஒரே நோக்கத்திற்காக மக்கள் தேடி அலைந்தனர்.[19]அதிகாரம் உயிர் பெறாத இடத்தில் அன்பு மட்டுமே தழைத்திருக்கும்[20] அத்தகைய அற்புத நிகழ்வை கபிலர் நேரடியாக கண்டுகொண்டிருந்தார். இதனை நோக்கும்கால், ” **எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை; வாழிய நிலனே.” (புறம்.187:3-4)** என்ற ஔவையின் மொழி இதற்கு பொருந்துவதை அறியலாம்

**உபசரிப்புவிழா:**

கபிலரின் வருகை எவ்வியூரில் விழாவாக கொண்டாடப்பட்டது. காட்டின் விழா என்றால் அதன் முதல் வெளிப்பாடு வேட்டைதான்.[21] இன்றும் சில ஊர்களில் கோவில் திருவிழாக்கள் தொடங்குவதற்கு முன்பு பரி வேட்டை என்ற வேட்டையாடும் நிகழ்வு நடக்கிறது. அனைவரும் காட்டில் வேட்டையாட செல்வர். வேட்டையில் எந்த உயிரினம் முதலில் சிக்குகிறதோ அந்த உயிரினத்தின் தலையை வேட்டையாடியவருக்கும் அதன் உறுப்புகளை காவல் தெய்வத்திற்கும் பலியிட்டு வேட்டையில் மேலும் விலங்குகள் பிடிபடவேண்டும் என்று வேண்டிக்கொள்வர். பின் வேட்டையாடி கிடைக்கும் விலங்குகளின் இறைச்சியை ஊர் மக்கள் அனைவருக்கும் பகிர்ந்து கொடுப்பர்.

இப்பறம்பு நாட்டில் அனைவரும் சிறு சிறு குழுக்களாக பிரிந்து வேட்டைக்குச் சென்று சொன்ன பொழுதுக்குள் ஊர் வந்து சேரவேண்டும். வேட்டையில் சிக்கும் முக்கியமான விலங்கு எதுவோ அதுதான் அன்றைய விருந்தை தீர்மானிப்பதாக உள்ளது.

ஒவ்வொரு விலங்கின் ருசிக்கும் ஏற்ற மதுவகை உண்டு. மதுவின் தன்மைக்கு ஏற்றபடியே இசை முழங்கும். இசைக்கு ஏற்பவே ஆட்டம் ஆரம்பிக்கும் ஆட்டத்தின் தன்மை வேட்டையாடப்படும் விலங்கில் இருந்தே தொடங்குகிறது. அது மானாட்டமா, மயிலாட்டமா,

மிளாகூத்தா, காட்டு எருமையின் கொம்பாட்டமா என்பது ஆகும். மதுவோடும் உணவோடும், இசையோடும், ஆட்டத்தோடும் கலந்தாக விழா அமைந்தது.[22]

ஒவ்வொரு நாளின் விழாவும் இவ்வாறே தொடங்கியது. கபிலர் இவ்விழாவினைக் கண்டு திகைத்துப் போனார். ஒவ்வொரு நாளும் பெரும் விருந்துகளோடு மூவேந்தர்களுடன் யவனத் தேறலை அருந்தியும், அவ்வேந்தர்களை போற்றியும் மகிழ்ந்துள்ளார். ஆனால் அதனை இப்போது நினைக்கும்போது அவை எல்லாம் அதிகாரத்தாலும், ஆடம்பரத்தாலும் நடந்தவை, செல்வத்தின் திளைப்பில் நடந்தவை இங்கோ முற்றிலும் வேறானது பாவனைகளும் அலங்காரமும் படியாத மானுட அன்பின் தூய வடிவமாய் இருக்கும் ஒருவனால்தான் இதனை அனுபவிக்க முடியும் என்று வியக்கிறார். மனதின் ஓரத்தில் இருக்கும் அழுக்கு கூட நம்மை வெட்கித் தலைகுனியச் செய்யும் அளவுக்கு உக்கிரம் ஏறிய பேரன்பு என்பதை கபிலர் உணர்கிறார்.[23]

**சுயநலமில்லா வாழ்வு:**

கபிலர் பறம்பு மக்களைக் கண்டு மிகவும் அதிசயத்தது அவர்களின் வாழ்க்கை முறையைதான் காரணம் யாதெனில், ஒவ்வொருவருக்கும் எனத் தனித்த சொத்தும், எப்பாடுபட்டாயினும் அதைச் சேமித்துப் பெருக்க வேண்டும் என்ற பெருந்தாகமும் இம்மக்களுக்கு இயற்கை வடிவமைத்த குண எல்லைகளைக் கடந்து மனிதன் போகவில்லை. மழை வந்ததும் செழிப்புறத் தழைத்து, வெயில் காலத்தில் வாடித் துவண்டு மலரும்போது நறுமணம் வீசி. கனியும்போது அள்ளி வழங்கி உதிரும்போது சத்தம் இல்லாமல் மண்ணில் மக்கி தம்மை உரமாக்கியபடி பயணத்தை முடித்துக் கொள்ளும் தாவர வாழ்க்கை போன்றே மனிதனின் வாழ்வும் கபிலரை மண்டியிட்டு வணங்க வைத்தது.[24]

தற்கால சமூகமானது தான் சொத்து சேர்க்க வேண்டும், தன் பரம்பரையே உட்கார்ந்து சாப்பிட வேண்டும் என்ற சுயநலபோக்கு மக்களிடையே நிரம்பி காணப்படுகிறது. இப்போக்கானது பிற உயிர்களிடத்தும் இரக்கமற்ற தன்மையில் நடந்து கொள்ள ஊக்குவிக்கிறது. ஏராளமான பகை, துரோகம் முதலிய குற்ற செயல்களிலும் ஈடுபட காரணமாக அமைகிறது. மலைமக்களிடையே காணப்படும் இச்சுயநலமற்ற பண்பானது நாகரீகம் வளர்ச்சி பெற்ற கல்வியறிவை பெற்ற சமூகத்தில் காண்பது அரிதே.

**ஒழுக்கப்பண்பு:**

தான் எத்தகைய வீரனாக இருந்தாலும் குலத்தலைவனுக்கு கட்டுபட்டு வாழும் தன்மை மற்றும் பெரியோர்க்கு மதிப்பளிக்கும் தன்மை போற்றத் தக்கது. இன்றும் பழங்குடி மக்களிடையே பெரியோர்கள மதித்து நாள்தோறும் அவர்களை வணங்கிவிட்டு அவர் பணிகளுக்கு செல்லும் பண்பு காணப்படுகிறது. பணிவாக நடந்துகொள்ளும் பண்பால் அனைவராலும அவன் போற்றப்படுவான் இதனையே வள்ளுவர்

**" எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வம் தகைத்து"** ***(குறள்.125)***

என்று கூறியுள்ளார். தொழில் நுட்பம் வளர்ந்த காலகட்டத்தில் பிள்ளைகள் பெற்றோர்களுடன் செலவழிக்கும் நேரமானது அரிதாகி தொ(ல்)லைபேசியுடன் செலவழிக்கும் நேரம் அதிகமாகி போனது. மேலும், தற்போது உள்ள தலைமுறையினர் பெற்றோரை உதாசினப்படுத்துவதும் அவர்களின் வயதான காலங்களில் அரவணைக்காமல் அவர்களை கைவிடுவது வழக்கமாகி கொண்டுவருகிறது. இப்பண்புகளே நாகரீக வளர்ச்சியின் உச்சக்கட்டம் ஆகும்.

***பளியர் இன மக்கள்-வாழ்வியல்:***

*பறம்பு மக்களின் வாழ்க்கை முறைகள் போன்று தற்காலத்திலும் தமிழகத்தில் திண்டுக்கல் சிறுமலை பகுதிகளில் வசிக்கும் பளியர் இனமக்களின் வாழ்வியலும் அமைந்துள்ளது. இதனை களஆய்வு மூலம் ஆய்வு மேற்கொண்டு கீழ்வருமாறு விளக்கியுள்ளனர்.[25] தமிழகத்தில் அமைந்துள்ள மலைசார்ந்த ஊர்களில் இச்சிறுமலை தொன்மையான ஒன்றாகும். பெயரளவில் சிறுமலை என்றாலும் திண்டுக்கல் மாவட்டத்தில் தொடங்கி அழகர்மலை எனப்படும் பழமுதிர்ச்சோலை வரையிலும் படர்ந்து நீளும் மலையாகவே உள்ளது. இம்மலை பண்டைக் காலத்தில் பாண்டியர்களின் ஆட்சிக்குட்பட்டதாக விளங்கியுள்ளது. இதற்குச் சான்றாக சிறுமலை நகரையொட்டி வரலாற்றுச் சிறப்புமிக்க '**பாண்டியன்குளம்**' என்ற குளம் இன்றளவும் உள்ளது. இது பாண்டியர்கள் காலத்தில் குடிநீர் ஆதாரத்திற்காக உருவாக்கப்பட்டதாக இருக்கலாம். மேலும் சிலப்பதிகாரம் இம்மலையினை"**தென்னவன் சிறுமலை**" என விவரிக்கின்றது.*

- ***தொழில்:***

*அரசாங்கம் 1984 ஆம் ஆண்டில் வனப்பொருள்கள் சேகரிக்க தடை விதித்ததில் இவர்கள் நலிவடைந்தனர். பிரதான தொழிலாக இருந்தது தேனெடுத்தல் ஆகும். உணவுக்காக மட்டுமே தொழிலில் ஈடுபட்டனர். தேன்,மூலிகைப் பொருட்கள், கீரை வகைகள் ஆகியவற்றை சேகரித்து அதனை விற்பதன் மூலம் தங்கள் வாழ்க்கை ஆதாரத்தை உறுதிப்படுத்தி கொண்டுள்ளனர். இவர்களின் தேனெடுக்கும் முறை வித்தியாசமானது .இவர்கள் தேனீக்களை புகை கொண்டு விரட்டுவதில்லை மாறாக தேனெடுக்க செல்லும் இவர்கள் உடலில் '**திருநீற்றுப்பச்சிலை**' என்ற மூலிகையை அரைத்து பூசிக் கொண்டு செல்கின்றனர் இந்த வாசனை தேனீக்களுக்கு பிடிக்காது அவைகளை மயக்கமடையச் செய்யும் இதன்மூலம் தேனினை சேகரிக்கின்றனர். இவர்கள் காலணிகள் அணிவதில்லை.*

- ***மூலிகைப் பற்றிய அறிவு:***

*காடுகளுக்கு செல்லும்போது ஒருவகை கொடியினை இடுப்பில் கட்டிகொண்டு செல்கின்றனர். அக்கொடியானது காடுகளில் உள்ள பல்வேறு விஷ பூச்சி மற்றும் உயிரிகளிடம் இருந்து பாதுகாக்கிறது. இக்கொடியில் இருந்து வெளியேறும் ஒருவகை வாசனை விஷ பூச்சிகளை நெருங்க விடாது.*

- ***வசிப்பிடம்:***

*பளியர் மக்கள் பெரும்பாலும் பாறை இடுக்குகளில் வாழ்கின்றனர். தேனெடுக் செல்லும்போது அங்கு பரண் அமைத்து தங்குகின்றனர். தங்கள் குடில்களை ஒருவகை புல்லைக்கொண்டு வேய்கின்றனர். அதன் பெயர் '**போதைப்புல்**' இப்புல்லானது 5 அல்லது6.30 அடி வளரும் தன்மையுள்ளது. இப்புல்லிருந்து வரும் ஒருவகை வாசனைக்கு பாம்பு போன்ற விஷ உயிரினங்கள் நெருங்காது.*

- ***நம்பிக்கை:***

*பளிச்சியம்மன் என்ற கடவுளை வணங்குகின்றனர். மரங்களை வெட்டினால் பளிச்சியம்மன் தங்களை தண்டிப்பாள் என்ற நம்பிக்கையும் இவர்களிடத்தில் உண்டு. காட்டிற்கு செல்லும்போது யாரும் தீப்பெட்டி கொண்டுசெல்வதில்லை. பச்சை மரங்களை இவர்கள் வெட்டுவதில்லை. விழா காலத்தில் கட்டைகளை வைத்து தீமூட்டி அதனைச் சுற்றி வழிபடுகின்றனர். வேங்கை மரத்தின் பட்டையை நீட்டு வாக்கில் கீறி அதில் இருந்து வரும்*

பிசின் கருப்பாக மாறும் அதனை குழந்தைகளுக்கு பூசிவிடுகின்றனர் இதன்மூலம் அவர்களை தீய சக்திகள நெருங்காது என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர்.

❖ **உணவு:**

உணவிற்காக வள்ளிகிழங்குகளையும் தேனினையும் பயன்படுத்துகின்றனர். அவ்வப்போது வேட்டை நாய்களைக் கொண்டு வேட்டையாடி உடும்பு, அணில், முயல் போன்றவற்றின் இறைச்சியினை உட்கொள்கின்றனர். குடிக்கும் நீரில் நன்னாரியின் வேரினைப்போட்டு பருகுகின்றனர். காய்கறி மற்றும் பழங்களை வேகவைத்தும் பச்சையாகவும் உண்கின்றனர்.

❖ **திருமணம்:**

வேங்கை மரத்தினடியில் பளிச்சியம்மனைச் சாட்சியாக வைத்து வள்ளிக்கொடியில் ஆண் பெண்ணின் கழுத்தில் தாலி கட்டும் வழக்கம் இருந்துள்ளது. (வள்ளிக்கொடி என்பது மலைகளில் தானே படரும் கொடி வகையைச் சார்ந்த தாவரம் ஆகும்.) தற்போது அவ்வழக்கம் இல்லை. ஆண்கள் சிறுவயதில் திருமணம் செய்துகொள்வதும் பலதார மணம் அங்கீகரிக்கப்பட்டதாகவும் உள்ளது. திருமணத்தின்போது பாரம்பரிய முறையில் தாய்மாமன் விரதம் இருந்து பொறை பூ கொண்டு வந்த பின் திருமணம் நடைபெறும். வட்டமாக பரப்பிய அருகம்புல் மீது நின்று தாலி கட்டுவர் மணமக்கள் பொய்யான வாழ்க்கை இன்றி உண்மையாக வாழ வேண்டும் என்பதை இத்திருமணம் வலியுறுத்துவதாகவும், எந்த சூழ்நிலையிலும் அருகம்புல் படர்ந்து வேரூன்றி வளர்வதைப்போல் மணமக்கள் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன.[26]

**தொகுப்புரை:**

பறம்பு மக்களின் வாழ்வியலானது தன்னலமற்ற ஒரு தூய அன்பு வாழ்வாக உள்ளது. மக்கள் இயற்கையோடு இயற்கையாக இணைந்த வாழ்வினை மேற்கொண்டு அவற்றைப் பற்றிய பேரறிவினை உடையவர்களாக திகழ்ந்துள்ளனர். **மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் (புறம்.186:2)** என்ற புறப்பாடல் வரிகளுக்கு ஏற்ப பாரியின் ஆட்சி அமைந்துள்ளதையும் அறியலாம். பல்வேறு குலங்கள் பறம்பு நாட்டில் இருப்பினும் பாரி ஒருவனையே தலைவனாக கொண்டு மக்கள் அனைவரும் ஒருமித்து வாழும் ஒப்பற்ற திறத்தை நோக்கும்போது பாரி குடிமக்களை போற்றியதை அறியமுடிகிறது. மேலும், அம்மக்கள் இயற்கையின் மரபுகளை மீறாமல் அவ்வியற்கையோடு இணைந்த வாழ்வை அதன் வழியே வாழ்ந்துள்ளமை சிறப்பு. பளியர் மக்கள் வாழ்வியலானது இயற்கையைச் சார்ந்த இயற்கை பண்புகளை மீறாத பறம்பு மக்களைப் போன்ற வாழ்வாக அமைந்துள்ளதையும் அறியலாம்.

**சான்றெண் விளக்கம்:**

1. வேள்பாரி நாவல் பக். 57
2. வே.பா.நாவல் பக்.21
3. புறம்.109 பக்.257
4. வே.பா. நாவல் பக்.97
5. ” பக்.37
6. ” பக்.63
7. ” பக்.66
8. ” பக்.67
9. ” பக்.68
10. ” பக்.74

11. ” பக்.78
12. ” பக்.79
13. ” பக்.90
14. ” பக்.21
15. ” பக்.22
16. ” பக்.22
17. ” பக்.95
18. ” பக்.95
19. ” பக்.90
20. ” பக்.95
21. ” பக்.90
22. ” பக்.90
23. ” பக்.91
24 .” பக்.97
25. இனவரைவியல் நோக்கில் சிறுமலைப் பளியர்
26. பண்பாடு மாறாத பழநி மலை பளியர்கள்

**முதன்மை நூல்:**

1. சு.வெங்கடேசன், வீரயுக நாயகன் வேள்பாரி 8-ம்பதிப்பு-(2022), விகடன் பிரசுரம்.

**துணைநின்ற நூல்கள்:**

2. முனைவர் இரா. செயபால் உரை, அகநானுறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை 600 098,3-ம் பதிப்பு-2007.
3. புதிய தெளிவுரை திருக்குறள் அழகப்பா தாளகம் வெளியீடு, மன்னார்குடி, .
4. முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் உரை,- புறநானுறு,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை 600 098, 2-ம்பதிப்பு-(2011)
5. டாக்டர் உ.வே.சாமிநாதையர் வெளியீடு-35 , இராமாயணம் (யுத்த காண்டம்)- மூன்றாம் தொகுதி, முதற்பதிப்பு-1963.
6. முனைவர் ஆ.பிரபு -இனவரைவியல் நோக்கில் சிறுமலைப் பளியர் கட்டுரை- வல்லினம் இலக்கிய இதழ் (2016)
7. தினமலர் நாளிதழ் பண்பாடு மாறாத பழநி மலை பளியர்கள் கட்டுரை- (2017)

ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com